தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2040, ஆனி 17

2009 ஜூலை 1, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்."

குறையில்லாத சில சொற்களைக் கொண்டு தெளிவான விளக்கம் தந்திட இயலாதவர்கள்தான் பல சொற்களைத் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருப்பார்கள்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

61—

கடலோரக் காவல் படை

***40661—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கடலோரக் காவல் படையை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் 12 கடலோரக் காவல் நிலையங்கள், 12 புறக் காவல் நிலையங்கள் மற்றும் 40 சோதனைச் சாவடிகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் 2007 ஆம் ஆண்டு முழு வீச்சில் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, சென்னை, தஞ்சை, நாகப்பட்டினம் மற்றும் கடலூர் போன்ற கடலோர மாவட்டங்களில் சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் பல்வேறு தருணங்களில் நடைபெற்று வருகின்றன. அதைப்போல நம்முடைய தமிழக மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கின்ற நேரத்தில், அங்கே இலங்கைக் கடற்படையினரால் சில நேரம் தாக்கப்பட்டு, அதனால் உயிர் பலியும் ஏற்படுகின்றது. நம்முடைய தமிழக மீனவர்களுடைய படகுகளும், விசைப் படகுகளும் தாக்கப்பட்டு, பல பொருளாதாரச் சேதங்களை ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய கடலோரக் காவல் படையைக் கூடுதலாக நவீனப்படுத்தி, அதுபோன்ற தவறுகள் மேலும் நடைபெறாமல் இருப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன பிரச்சினையைச் சந்திப்பதற்கு ஏற்ற வகையில் தமிழ்நாடு கடலோரக் காவல் படை நவீனப்படுத்தப்படுவது மாத்திரமல்ல, விரிவுபடுத்தப்பட்டு, வலுப்படுத்தப்பட்டு, இந்தப் பிரச்சினையைச் சந்திக்கும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

2009 ஜூலை 1]

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் தீவிரவாதிகளால் நம்முடைய கடற்கரைப் பகுதிகளில் கண்ணி வெடிகள் பதிக்கப்பட்டிருக்கின்றன; சில நேரங்களில் துப்பாக்கிச் சூடுகள் நடைபெறுகின்றன; சில கடத்தல் முறைகளும் நடைபெறுகின்றன. இதனால் அமைதியாக இருக்கின்ற நம்முடைய தமிழகத்திலே பல்வேறு விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு பல வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருப்பதால், நம்முடைய கடலோரக் காவலர்களுக்கு உயர்ந்த இரகக் கருவிகளும், ராடார் கருவிகளும், தொலைதூரத்தில் வருகின்ற தீவிரவாதிகளைக் கண்டுபிடித்து அவர்களைத் தாக்குவதற்கும், நம்முடைய தமிழகத்தைப் பாதுகாப்பதற்கும், தமிழகக் காவல் படையினருக்கு உயர்ந்த இரக நவீனக் கருவிகளைக் கொடுத்து, நம்முடைய காவல் படையினை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தீவிரவாதம் போன்ற பல விஷயங்களைச் சந்திப்பதற்கும், ஆங்காங்கு, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கண்ணி வெடிகள் போன்றவற்றை அகற்றுவதற்கும், அத்தகைய வெடிகளால் ஏற்படுகின்ற விளைவுகளிலிருந்து மக்களை எச்சரித்துப் பாதுகாப்பதற்கும் இந்தக் கடற்படை சேவை செய்யும்; நல்ல முறையிலே பணியாற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் கடலோரப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அந்தத் திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் யாவை என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-35

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மத்திய அரசின் திட்டத்தின்படி, இந்தக் கடலோரப் பாதுகாப்புப் பணி மாநில அரசின் அதிகாரிகளோடு இணைந்து ஆற்றப்படுகிறது. இதற்காகக் கடலோரப்

பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 44 கோடியே 8 இலட்சம் ரூபாய் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக, தமிழகத்தில் 12 கடலோரக் காவல் நிலையங்களில், 12 புறக் காவல் நிலையங்கள், 40 சோதனைச் சாவடிகள் அமைக்க அனுமதி வழங்கி, ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 12 கடலோரக் காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. அவற்றில், 8 காவல் நிலையங்களில் 16-6-2008 அன்றும், 4 காவல் நிலையங்களில் 15-12-2008 அன்றும் பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டன. 12 புறக் காவல் நிலையங்களில் 2 புறக் காவல் நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. ஏனைய இடங்களில் விரைவில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும். 40 புதிய சோதனைச் சாவடிகளில், 17 சோதனைச் சாவடிகளுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 12 கடலோரக் காவல் நிலையங்களுக்கு, ஒவ்வொரு நிலையத்திற்கும் தலா ஒரு 12 டன் இயந்திரப் படகும், ஒரு 5 டன் இயந்திரப் படகும் என ஆக மொத்தம் 24 இயந்திரப் படகுகள் மத்திய அரசால் வழங்கப்படவுள்ளன. இவற்றுள், ஒரு 12 டன் இயந்திரப் படகும், ஒரு 5 டன் இயந்திரப் படகும் தற்போது வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள இயந்திரப் படகுகள் இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்கப்பட்டுவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரக் காவல் நிலையங்களுக்கான பணியிடங்கள் எத்தனைக்கு இதுவரை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 12 காவல் நிலையங்களுக்கான காவலர்கள் மற்றும் அலுவலர்களை நியமனம் செய்யும்பொருட்டு, 26-4-2007 அன்று சட்டப் பேரவையிலேயே முதல் அறிவிப்பாக, தமிழகக் கடலோரப் பாதுகாப்புக் குழுமத்திற்கு ரூ.5 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டது. அதில் முதல் கட்டமாக 176 களப் பணியாளர்களும், 8 அமைச்சுப் பணியாளர்களும் வழங்கி 20-7-2007-ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக 52 களப் பணியாளர் பதவிகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

2009 ஜூலை 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரக் காவல் நிலையங்களில் பணியாற்றும் காவலர்களுக்குத் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நிச்சயமாகத் தனிப் பயிற்சி அளிக்கப்படவேண்டும்; இப்போது அளிக்கப்பட்டு வருகிறது. கடலோரப் பாதுகாப்பிற்கென்று இதுவரை 120 காவலர்கள், இந்தியக் கடலோரக் காவல் படையினரிடம் அடிப்படைப் பயிற்சி பெற்றுள்ளனர். கப்பலிலே மூன்று நாட்கள் சென்னையிலிருந்து மண்டபம் வரை பயணமாகச் சென்றது உட்பட இப்பயிற்சியிலே அடங்கும். இப்பயிற்சிக்காக மாநில அரசு ரூ.2 இலட்சமும், மத்திய அரசு ரூ.14½ இலட்சமும் ஒதுக்கியுள்ளன. இப்பயிற்சி இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழகத்தில்தான் அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு இயந்திரப் படகுகளை வழங்கியவுடன், மேற்குறிப்பிட்ட பயிற்சி பெற்ற காவலர்கள் 'கலம் செலுத்தும் காவலர்கள்' என்ற பெயரில் கடமையாற்ற இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கடற்கரைப் பகுதியில் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது பாதுகாப்பை மிகப் பலப்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. மூன்று பக்கங்களிலே இந்திய நாட்டிற்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய நிலையில், நம்முடைய தமிழகத்திற்கு இதுவரை எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லை.

ஆனால், தொலைநோக்குப் பார்வையோடு இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், வருகின்ற காலத்தைக் கணக்கிலே கொண்டு, இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகள் மாறி, இலங்கையிலே ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாகவும், மேற்கிலே இருக்கின்ற, சீனாவிலே ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாகவும், நம்முடைய கடலினுடைய

பகுதியைப் பாதுகாக்க வேண்டியது மிக அவசியமாகக் கருத வேண்டியிருக்கிறது. சீன நாடு இன்றைக்கு நம்முடைய தமிழகத்தையொட்டி மிகப் பெரிய துறைமுகத்தை இலங்கையிலே தன்னுடைய சொந்த உபயோகத்திற்காகக் கட்டி வருகிறது. அதேபோன்று பர்மாவிலும் கட்டி வருகிறது. இந்த நிலைகளில், வருகின்ற காலத்தில் நமக்கு அச்சுறுத்தல்கள் இருக்கலாம் என்பதை மனதில்கொண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை உடனடியாகத் தொடர்புகொண்டு, நம்முடைய கடற்கரையைப் பலப்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்படுவதுபோலவே மிகுந்த எச்சரிக்கையோடு நம்முடைய கடற்கரையோரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலையை மத்திய அரசு எடுத்து, கடற்கரையோரமாக இருக்கின்ற மாநிலங்களிலேயுள்ள பகுதிகளில் இத்தகைய வலிமையான பாதுகாப்பை உருவாக்குவதற்கு இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே, மத்திய அரசே இன்றைக்கு இந்த எச்சரிக்கையான ஆயத்தங்களைச் செய்கிற காரணத்தால், நாம் அதைப்பற்றி அதிகக் கவலைப்படத் தேவையில்லை; கவலைப்படாமலும் இருக்கமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசினுடைய கடலோரக் காவல் படைக்குத் துணையாக, தமிழகத்தினுடைய கடலோரக் காவல் படை துணை நிற்கும் என்று சொன்னார்கள். தமிழகத்தில் அதற்குரிய காவல் நிலையங்களுக்கு, ரோந்துப் பணிகளுக்காக இயந்திரப் படகுகளும் வழங்கப்பட்டிருப்பதாக அவருடைய பதிலுரையில் சொன்னார்கள். அவ்வாறு ரோந்துப் பணிக்குச் செல்கின்ற காவலர்களுக்கு அரசின் சார்பாக நீச்சல் பயிற்சி அளிக்கப்படுகிறதா? அதிலும் குறிப்பாக,

2009 ஜூலை 1]

கடலில் நீந்துவது குறித்து அவர்களுக்குப் பிரத்யேகமான நீச்சல் பயிற்சி அளிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நீச்சல் பயிற்சியைவிட முதலில் கப்பலிலே போகும்போது கீழே விழாமல் இருக்கின்ற பயிற்சியை அவர்களுக்கு அளிக்க வேண்டும். (சிரிப்பு) விழுந்துவிட்டால்தான் நீச்சல் பயிற்சி தேவை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

62—

விமானப் பயிற்சி நிலையம்

***553—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியிலுள்ள விமானப் பயிற்சி நிலையத்தைச் சுற்றி 900 மீட்டர் அளவிற்குக் கட்டடங்கள் கட்டக் கூடாது என தடை விதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விதிகளைத் தளர்த்தி அந்தத் தடையை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 175, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 15-9-2008-இல், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிக் கட்டட விதிகள், 1972-ன் விதி எண் 5-இல், துணை விதி 5 மற்றும் விதி எண் 6-இல், துணை விதி 6 ஆகியவற்றிக்குச் செய்யப்பட்ட மாற்றங்களின்படி, தாம்பரம் விமான நிலையத்திற்கு 900 மீட்டர் சுற்றளவில் கட்டடங்கள் கட்டக்கூடாது என்பது தற்போது 100 மீட்டர் சுற்றளவு என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.